நாள். 12.06.2026
அசல் வழக்கு எண்.9/2021
பி.வா.சா. 1 பொன்னப்பன்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி..</u>

பொன்னம்மாள் நல்லசிவன் டிரஸ்ட் சமாதி குருபூஜை டிரஸ்ட் நாங்குநேரி தாலுகாவில் எவ்வளவு இடங்கள் இருக்கிறது என்றால் குசவன்குளத்தில் 1 ஏக்கர், நாங்குநேரியில் 1 ஏக்கர் நிலம் நஞ்சை உள்ளது. புஞ்சை நிலம் கிடையாது. தெற்கு நாங்குநேரியில் எவ்வளவு இடம் உள்ளது என்றால் 4 ஏக்கர் 84 சென்ட். தெற்கு நாங்குநேரியில் உள்ள இடத்திற்கு சர்வே எண் 210 என்றால் சரிதான். மொத்தமாக 4 ஏக்கர் 84 சென்ட் என்றால் சரிதான். பொன்னம்மாள் நல்லசிவன் டிரஸ்ட் பல்வேறு நபர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு 1 ம் வாதியின் மாமனார் தான் வெள்ளையா நாடார் என்றால் கேள்விபட்டுள்ளேன். மேற்படி வெள்ளையா நாடாருக்கு பொன்னம்மாள் நல்லசிவன் டிரஸ்ட் ஒத்திக்கு இடம் கொடுத்துள்ளார்களா 1923 ல் 3 வருடத்திற்கு குத்தகைக்கு கொடுத்துள்ளார்கள்.

மேற்படி குத்தகையை 2 பதிவு செய்யப்பட்ட குத்தகைகளாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் குத்தகை ஆவணம் அல்ல, ஒத்தி பத்திரம் என்றால் சரியல்ல. நான் பார்த்த 1923 பத்திரம் இதுவரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான், வெள்ளையா நாடார் இறப்பிற்கு பிறகு ரத்து ஆகி விட்டது. வெள்ளையா நாடார் இறப்பிற்கு அவரது வாரிசுகள் குத்தகைதாரர் முறையில் தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இந்த சொத்தை தவிர வேறு சொத்துக்கள் வாதியின் குடும்பத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் நாங்குநேரியில் நஞ்சை நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் நாளது தேதி வரை மேற்படி சொத்து வாதியின் குடும்ப அனுபவத்தில் இருந்து வருகிறதா என்றால் தரிசாக கிடக்கிறது. நாங்குநேரியில் உள்ள நஞ்சை எந்த வருடம் குத்தகைக்கு பெற்றார்கள் என்றால் தெரியாது, பாதி இடம் ரயில்வேக்காக எடுக்கப்பட்டுள்ளது.

அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 474, சர்வே எண் 191 ஆகும். நான் சொல்லும் டிரஸ்ட் எந்த முகவரியில் செயல்பட்டு வருகிறது. 56/1, தெற்கு ரதவீதி, நாங்குநேரி. மேற்படி முகவரியில் தான் டிரஸ்ட் செயல்பட்டு வருகிறது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிரஸ்டில் நான் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் செயலாளராக உள்ளேன். நான் எந்த வருடத்திலிருந்து செயலாளராக உள்ளேன் என்றால் 2007 ம் ஆண்டில் இருந்து. 2007 க்கு முன்பு இந்த டிரஸ்ட்க்கு யார் செயலாளராக இருந்தார் என்றால் மீனாட்சி சுந்தரம் என்பவர் இருந்தார். 2007 லிருந்து நான் செயலாளராக இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, என்னை நியமித்த உத்தரவு தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணம் மேற்படி ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 1989 ல் வழங்கப்பட்டது ஆகும், நான் முதலில் செயலாளராக இருக்கும் பொழுது வழங்கப்பட்டது. 2007 லிருந்து செயலாளராக இருப்பதற்கு உத்தரவு எதுவும் கிடையாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் டிரஸ்டின் முகவரி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணம் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி ஆனது என்றால் சரியல்ல. நான் பொன்னம்மாள் நல்லசிவன் டிரஸ்ட் உறுப்பினர் கிடையாது என்றால் சரியல்ல, நான் செயலாளர். மேற்படி டிரஸ்ட்டை பொறுத்தவரை நான் 3 ம் நபர் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா எண் என்னவென்றால் 192 ஆகும்.

தாவா சொத்திற்கு சரோஜினி அம்மாள் காப்பாளராக இருந்து தீர்வை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான், நாங்களும் செலுத்தியுள்ளோம் அவரும் செலுத்தியுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ஆவணம் சரோஜினி அம்மாள் செலுத்திய தீர்வை ரசீதுகள் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை சரோஜினி அம்மாள் குடும்பத்தினர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சரோஜினி அம்மாள் குடும்பத்தின் சட்டவழியான அனுபவத்தை இடைஞ்சல் செய்தததால் தான் இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, இடைஞ்சல் எதுவும் செய்யவில்லை. வழக்கு சொத்தை பொறுத்து காப்பாளர் முறையில்

சரோஜினி அம்மாளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது ரத்து செய்யப்பட்டுவிட்டது. மேற்படி ரத்து உத்தரவு மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் பொன்னம்மாள் நல்லசிவன் டிரஸ்ட் செயலாளர் என வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்தினர் 1923 ம் ஆண்டு பதிவு செய்த ஒத்தி ஆவணத்தின் படி தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1923 ம் ஆண்டு ஒத்தி ஆவணம் தற்போது வரை செல்லடிக்கப்படவில்லை என்பதால் வாதி குடும்பத்தின் அனுபவம் சட்டப்படியானது என்றால் சரியல்ல. வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.